**Kanton Bern**
**Canton de Berne**

Bildungs- und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
Abteilung Erziehungsberatung

# EB

## இளையோருக்கான வழிகள்

(Wege für Jugendliche)

பாடசாலையில் அல்லது தொழிற்கல்வியில் பிரச்சினையா? வீட்டில் துயரம் அல்லது சண்டையா? உங்களால் அனைத்தையும் தாங்க முடியாதுள்ளதா? நாங்கள் உங்களுக்காக உள்ளோம்.

EB உங்களுக்கு உங்கள் தனிப்பட்ட வழியில் உதவும். நாங்கள் உங்களுக்கு பாடசாலையில் அல்லது தொழிற்கல்வியில் ஏற்படும் சிக்கல்களுக்கு, உங்களது வீட்டில், தோழர்/தோழிகளுடன், நண்பர்/நண்பிகளுடன் ஏற்படும் பிரச்சினைகளின்போது ஆலோசனை தந்து உதவுவோம். அதேவேளை உங்களுக்குத் தனிப்பட்ட கேள்விகள் இருந்தாலும் நீங்கள் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

**நாங்கள் இவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுகின்றோம்**

உங்களது துயரங்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துக்களை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். புதிய கண்ணோட்டத்தைத் திறப்பதற்காக உங்களுடன் ஒன்றுசேர்ந்து நாங்கள் வழிகளையும் தீர்வுகளையும் தேடுவோம். முதல் அடியை எடுத்து வைப்பதற்கு உங்களுக்கு என்ன தேவை என்பது குறித்து உங்களுடன் நாங்கள் கலந்துரையாடுவோம். சிலசே-வளைகளில் ஒரு கலந்துரையாடலே போதுமானதாக இருக்கலாம். இருப்பினும் அதிக நேரம் தேவைப்படலாம். ஒருவர் தனது துயரங்களை ஒரு துறைசார் நபருடன் கலந்துரையாடுவதால் ஆறுதல் பெற்றுக்கொள்ளலாம்.

**இதன்மீது நீங்கள் அதிகளவில் நம்பியிருக்கலாம்**

பேர்ண் மாநிலத்தின் வளர்ப்பு ஆலோசனை (EB) என்பது ஒரு பக்கச்சார்பற்ற ஆலோசனை நிலையமாகும். எமது ஆண் மற்றும் பெண் உளவள ஊழியர்கள் இரகசியம் காக்கும் கடமைக்கு உட்பட்டவர்கள். உங்களுக்கான இந்த ஆலோசனை இலவசமானதாகும்.

**நீங்கள் இவ்வாறு உங்களைப் பதிவுசெய்யலாம்**

உங்களுக்கு அண்மையாக உள்ள ஆலோசனை நிலையங்களை எமது இணையத்தளத்தில் கண்டுகொள்ளலாம். எம்மை தொலைபேசியில் அழையுங்கள் அல்லது எமக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வழிகளைக் காணுதல்**

வளர்ப்பு ஆலோசனை என்பது பேர்ண் மாநில கல்விப் பகுதியின் ஒரு உதவிச் சேவையாகும்.

www.be.ch/erziehungsberatung